தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

# சங்க இலக்கியத்தில் கலைகள்

## Arts in Sangam Literature

**முனைவர் இரா. அன்சல்யா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, புனல்குளம், புதுக்கோட்டை

**Dr. R. Ansaliya**, Assistant Professor Department of Tamil, Queens College of Arts and Science for Women, PunalKulam, Pudukkottai

Email: ansisubi1984@gmail.com, ORCiD:

**Abstract:**

To understand the lifestyle of the people during the Sangam period, Sangam literature greatly assists us. Sangam literature clearly depicts various aspects such as the daily habits of the people of that era, their professions, key features of their culture, and developments in fields like education, economy, and art. As conveyed by the lines, "The world with its blooming flowers thrives because of the king," the lives of the people of that era were largely dependent on the king. The king's rule and his actions directly impacted the lives of the people. The Puram poems in Sangam literature, especially those focusing on kings and chieftains, serve as a mirror reflecting the lives of the people of that time. These poems primarily speak of the kings' valorous deeds, their generosity, their martial prowess, and their perspective on the people. Therefore, the main objective of this study is to bring forth information about the external life (i.e., outward aspects like politics, economy, society, warfare) of the Sangam period people through these Puram poems. Through this, we can gain a deeper understanding of an important period in our ancient civilization.

**Keywords**: *Sangam Literature, Puram, Arts, Culture, Tamil Literature, History, Society, Economy, Customs.*

Tamilmanam

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்க கால மக்களின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள, சங்க இலக்கியங்கள் நமக்கு மிகப்பெரிய உதவியைச் செய்கின்றன. அக்கால மக்களின் தினசரி பழக்கவழக்கங்கள், அவர்களுடைய தொழில்கள், பண்பாட்டின் முக்கிய அம்சங்கள், கல்வி, பொருளாதாரம், கலை போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகள் என எல்லாவற்றையும் சங்க இலக்கியங்கள் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற வரிகள் உணர்த்துவது போல, அக்கால மக்களின் வாழ்வியல் பெரும்பாலும் மன்னனைச் சார்ந்தே அமைந்திருந்தது. மன்னனின் ஆட்சியும், அவனது செயல்களுமே மக்களின் வாழ்க்கையை நேரடியாகப் பாதித்தன. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் புறப்பாடல்கள், குறிப்பாக மன்னர்களையும் குறுநில மன்னர்களையும் மையமாகக் கொண்ட பாடல்கள், அக்கால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கின்றன. இந்தப் பாடல்கள் பெரும்பாலும் மன்னர்களின் வீரதீரச் செயல்கள், அவர்களின் கொடைத்திறன், போர்த்திறன், மக்களின் மீதான அவர்களின் பார்வை ஆகியவற்றைப் பேசுகின்றன. எனவே, இந்தப் புறப்பாடல்கள் மூலம் சங்க கால மக்களின் புறவாழ்வின் (அதாவது, அரசியல், பொருளாதாரம், சமூகம், போர் போன்ற வெளித்தோற்றமான அம்சங்கள்) செய்திகளை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின்

முக்கிய நோக்கமாகும். இதன் மூலம், நாம் நம்முடைய பண்டைய நாகரிகத்தின் ஒரு முக்கியமான காலகட்டத்தைப் பற்றி ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

***திறவுச்சொற்கள்:*** சங்க இலக்கியம், புரம், கலை, பண்பாடு, தமிழ் இலக்கியம், வரலாறு, சமூகம், பொருளாதாரம், பழக்கவழக்கங்கள்.[1]

**முன்னுரை:**

மனிதனது தன் வயமாக்கி நிரப்பி அளவோடு நில்லாமல் வெளிப்படும் ஆற்றலை கலை என்பது கலை ஆற்றல் உள்ளத்தை ஈர்க்கும் காவியமாக வெளிப்படலாம், கண்ணை கவரும் ஓவியமாகவும் வெளிப்படலாம், சிற்பமாகவும் உறவு கொள்ளலாம் கண்ணையும் கருத்தையும் தன்பால் இருக்கும் அழகிய கட்டமாக வெளிப்படலாம் காட்சியளிக்கலாம்.

நாகரீக ஓட்டத்தில் தவழத் தொடங்கிய பழைய கற்கால மனிதன் தன் வாழ்வில் மலை, குகைகள், இருந்த பாறைகள் மீது தன் கைவண்ணத்தை காட்டினான். வண்ணங்களை சிற்பங்களாக மாறியது ஓவியங்களாகும் வரைந்தான் மனிதனில் இருக்கும் கலை ஆற்றலே உலகத்தார்க்கு இயக்கம் சித்தன்னவாசல் ஓவியங்களையும் தஞ்சை பெரிய கோவில் ஓவியங்களையும் உண்டாக்கியது.

சிற்பங்களையும் காந்தார சிற்பங்களையும் கண்ணையும் கருத்தையும் கவரும் தென்னிந்திய சிற்பங்களையும் சாஞ்சி அமராவதி முதலிய இடங்களையும் உள்ள பௌத்த சிற்பங்களையும் தாஜ்மஹால் என்னும் கவினுரு கட்டிடத்தை உருவாக்கினர்.உலக அதிசயங்களாகவும் போற்றப்படுகின்றன.

ஒருவன் பலரைப் போல நடித்துக் காட்டுதல் கனவுக்கு பொருள் கூறுதல், மெழுகுவேலை துணிகளுக்கு சாயம் தோய்த்தல், அரசியல் பொருளாதாரம் ஊர்களை அமைப்பது கலப்பிட்ட பொருள்களில் கலப்பை கண்டுபிடித்தல், எண்ணியவற்றை முடிப்பது நெல் முதலிய தானியங்களின் இலக்கணத்தை அறிதல், வேலையாட்களை இம்புறுத்தி வேலை வாங்குதல், மக்களின் உள்ளத்தை கவருவது, உயர்ந்தோரிடம் பணி செய்யும் திறமை, வீட்டு மரியாதைகள் ஒழுக்கங்கள் அறிதல், நீரோட்டம் உள்ள இடங்களை கண்டறிதல், உலக இயல்பினை அரிதல், என்பனவும் இவை போல் கலைகள் என்று சுட்டப்பட்டுள்ளன[1].

**கலைஞன் இலக்கணம்**

கலைஞன் இயற்கை அமைப்புகளை கூர்ந்து கவனித்திருத்தல் வேண்டும். பொருள்களின் பல்வேறு இயல்புகளையும் அவற்றிற்கு ஏற்ப பொருத்த தன்மையையும் நன்கு தெளிதல் வேண்டும். தன் நிலையில் தோன்றுனவற்றை காவியமாகவோ ஓவியமாகவோ சிற்பமாகவோ வேறொன்று ஆகவோ வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும். கலைஞன் பொருளையும் வாழ்க்கை முறையையும் நன்கு அறிந்து தெரிந்திருத்தல் வேண்டும் கலைஞன் சிறந்த ஒழுக்கம் பெற்றெடுத்தல் வேண்டும் **(தமிழ் கலைக்களஞ்சியம் பக்க எண் 341)**[2] இவை அனைத்தும் ஒரு சேரப்பெற்ற வினை சிறந்த கலைஞன் ஆவான்.

**கட்டடக்கலைகள்**

முருகன் கண்ணன் சிவன் முதலிய கடவுளர்களுக்கும் சிறு தெய்வங்களுக்கும் தமிழகத்தில் கோவில்கள் இருந்தன. சுடுமண் ஓங்கிய நெடுநிலை கூட்டம் என்று சொல்லப்படுவதால் அக்கால கோயில்கள்

அழியத்தக்க மண் செங்கல், மரம், உலோகம் இவற்றால் ஆனவை என்று கொள்ளலாம். பழங்கால கட்டிடங்களை செங்கல் சுண்ணாம்பு களிமண் இவற்றுகளால் ஆன கட்டடங்களை ஆகும் .கடவுள் உள்ள இடத்திற்கும் காவலன் வளமனைக்கும் கோவில் என்பதே பொதுப் பெயராக இருந்தது.

**"ஒரு திறம் சாரா வரை நாள் அமையத்து**

**நூலறி புலவர்நுண்ணுயிர் கயிரிட்டு**

**தேயங்கொண்டு தெய்வம் நோக்கி**

**பெரும் பெயர் மன்னர் கொப்ப மனை வகுத்து"[2]**

அரண்மனையின் அந்தப்புர சுவர்களும் இருந்தவை. உயர்ந்த வேலைப்பாடு கொண்டவை அவற்றின் மீது செஞ்சாந்து கொண்டு பூக்கொடிகள் எழுதப்பட்டு இருந்தன. தூண்கள் கருமையும் திராட்சியும் பளபளப்பும் கொண்டு விளங்கின. சிலப்பதிகார காலத்தில் கிபி இரண்டாம் நூற்றாண்டில் அரசனது அரண்மனை சோதிடம் அறக்கலத்து அந்தணர் கட்டடத் தொழில் நிபுணர் ஆகியோருடன் சிற்பக்கலை அறிஞரும் சென்று கண்ணகி எனும் பத்தினியின் கோவில் அமைத்தனர் என்ற செய்தி காண முடிகின்றது பொன் மண்டபங்களும் பல வகைப்பட்ட கட்டிடங்களும் கற்கோவில்களும் கற்தூண்களும் இருந்தன என்பதை அறிய முடிகின்றது.மன்னர் காலத்தில் சேரர்களும் சோழர்களும் பாண்டியர்களும் பல்லவர்களும் மராட்டியவர்களும் கட்டிடக்கலைக்காக பெரிதும் பாடுபட்டனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது சோழர் கலத்தில் கட்டிடக்கலை

சோழர்கள் கட்டிய தஞ்சை பெரிய கோவிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் தாராசுரத்து சிவன் கோவிலும் திரிபுவன விரேசுவரர் சோழ கால கட்டிடக்கலை சிறப்பை நன்கு அறிபவன ஆகும். உயர்ந்தது அகன்று பகைவரை தாக்கும் நிலையில் அமைந்துள்ள மதில்களை தஞ்சை பெரிய கோவிலில் கங்கைகொண்ட சோழபுரத்திலும் காணலாம்.தாராசுரத்தில் சிவன் கோவில் கட்டிடக்கலைக்கு பெயர் போனது உருளைகலால் பூட்டப் பெற்ற அமைப்புடைய கோவில்கள் நடுப்பகுதி அற்புத வேலைப்பாட அமைந்த தூண்களையும் மண்டபங்களையும் உருவ சிலைகளையும் பொலிவிற்று விளங்குகின்றது. தில்லை போன்ற பெரும் கோவில்களிலும் அம்மனுக்கென்று பெரிய தனி கோவிலும் பெருங் கோவில்களுக்குள்ளே அமைப்பு உள்ளன. தஞ்சை திருவாரூர் பழைய அறை கங்கைகொண்ட சோழபுரம் மதுரை காஞ்சி எனும் இடங்களில் இருந்த சோழ பாண்டிய பல்லவ அரண்மனைகள் காலப்போக்கில் அழிந்து விட்டன. மதுரை திருமலை நாயக்கர் மஹாலும் தஞ்சை அரண்மனையும் பிற்கால கட்டிடக்கலைக்கு சிறப்பு பெற்று விளங்கின தஞ்சை அரண்மனை, மிக உயர்ந்த மதில், எழுநிலைமாடம் ,சங்கீத மஹால், முதலியன மராட்டிய காலத்தில் கட்டடக் கலை அறிந்தவை. சோழ பாண்டியர் அரண்மனைகளும் இருந்து இருக்குமாயின் அவை நமக்கு உணர்த்தும் அறிய உண்மைகள் பலமாக இருக்கலாம்

**ஓவியக்கலைகள்**

நம் நாம் கண்ணில் காணும் பொருள்களை சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை பண்டைய தமிழன் பண்டைய மனிதன் தான் பார்த்தவற்றியே படமாக எழுதிக் காட்டினான் பின்பு அறிவு வளர வளர தன் மனதில் பல உருவங்களை காட்சிகளையும் முடிவு செய்து அவற்றை படங்களாக வரைந்தான்

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். போரில் விழுப்புண் பட்டு வீரர்கள் இறந்த இடத்தில் உள்ளது. அவர்களை புதைத்த இடத்தில் அல்லது அவர்களின் உடல் சாம்பலையும் அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும் அக்கல்லின் இறந்த வீரனது உருவம் செதுக்கப்படும் .பின்னர் அதற்கு பூசை நடத்தப்படும். அதற்கு நடுகல் என்பது பெயர் ஒரு வீரநாளும் இறந்தவன் மரபினாலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஒரு உருவம் செதுக்கப்படுவதற்கு முன் உருவத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதல் வழக்கமே ஆகும் அந்த ஓவியத்தின் உதவி கொண்டு கல்லில் உருவம் செதுக்கப்படும் இவை தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ2300ஆண்டுகளுக்கு முன்பே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடையே இருந்து வந்ததை நாம் அறிய முடிகின்றது

**“வம்ப மாக்கள் கம்பளல மூதூர்ச்**

**சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறு**

**மைறு படிவத்து வானவர் முதலா**

**எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி**

**வெண்சுதை விளங்கியது வித்தகர் இயற்றிய**

**கண்கவர் ஓவியம் கண்டு நிற்கு உணரும்“**[3]

சித்தன்னவாசல் புதுக்கோட்டை மேற்கு 10க்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்று ஒன்றில் குடவரை கோவில் இருக்கிறது. அதனை குடை வித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடு தூண்கள் இரண்டு நடன மாத இருவரின் உருவங்கள் தீட்ட பெற்றுள்ளன. அவரிடம் கூந்தல் அமைப்பு ஆடல் அமைப்பு அணி வகைகள் நடனமாடும் நிலையில் கைகள் அமைந்துள்ள முறை முதலியன அவற்றை எழுதிய ஓவியத் திறமையை உலகறிய செய்கின்றன. அவ் ஓவியங்களை கொண்டு அக்கால தமிழகத்தில் நடனமாதர் தம் கூந்தல் அமைப்பு ஆடை முதல் அமைப்பு அணி வகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு காணலாம்

**தஞ்சை ஓவியங்கள்**

பல்லவருக்கு பிற்பட்ட வந்த சோழர்கால ஓவியங்கள் இன்று நாம் காணும் மாறி இருப்பவை தஞ்சை பெரிய கோவில் ஓவியங்களை ஆகும். அவை தஞ்சை பெரிய கோவில் கருவறையின் புற சுவர்கள் மீது எழுதப்பட்டுள்ளன .பல நூற்றாண்டுகளுக்கு பிறகு அவை மறைக்கப்பட்டு அவற்றின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விருவகை ஓவியங்களும் நமக்கு கிடைத்துள்ளன. அடுத்த ஓவியம் கயிலை காட்சியை குறிக்கிறது. சிவபெருமானின் புலித்தோல் மீது அமர்ந்திருக்கிறார். அவரை சுற்றிலும் தேவர்கள் பூத கணங்களும் காணப்படுகின்றன.

திருக்குற்றாலத்தில் உள்ள சித்திர சபையில் உள்ள ஓவியங்கள் நாயக்க காலத்தொகை தில்லையில் சிவகாமி அம்மன் திரு முன்பு உள்ள மண்டப கூரையில் கட்டப்பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தை அவற்றில் பெருமாள் மோகினி அவதாரம் எடுத்து ஒரு கவனத்து முனிவரை மயக்கும் காட்சி சிவபெருமான் பிச்சாரனாக வருதலையும் அவரைக் கண்டு முனிவர் மனைவியின் உள்ளம் நெகிழ்ந்தலையும் குறிக்கும் ஓவியங்கள் காணத்தக்கவை.[4]

**இசையின் சிறப்பு**

இசை என்னும் இசைவிப்பது தன் வயப்படுத்துவது என்று பொருள்படும் இசை கல் மனத்தையும் கரைந்துருக செய்யும். வெற்றி வாய்ந்தது கற்றோரும் மற்றொரு இசையில் மயங்கி பற்றி நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரே வளர்ப்பது இசை. இசையை கேட்டு இன்புறாத உயிர்கள் இல்லை என்றே கூறலாம். விலங்குகள், பறவைகள், செடிகள், பாம்பு முதலிய உயிர்கள் இசையில் இன்பமடைகின்றன பால் வேண்டி ஞாபகம் பசும் கன்றுகள் இசை வயப்பட்டு பாலையும் பசியையும் மறந்து கண்கள் சொருகி மகிழ்ச்சி அடைகின்றது. இசையின் வயப்படாதார் அன்பின் வயப்படார் என்று கூறுதல் அமையும் இசை வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும்.

**சங்ககாலத்தில் இசை**

தமிழ் பெண்கள் ஏழு அவை குரல், துத்தம், கைக்கிளை, உலை ,இழி, உளறி, தாரம் ,என பெயர் பெற்றன. இவற்றிலிருந்து பிறப்பன திறங்கள் எனப்பட்டன. இவ்வாறு பிறக்கும் பண்கள் திறங்களும் பல கிளைகளுமாக இயங்கும் வகைகள் எண்ணிறந்த இசை வகைகள் கண்டறியப்பட்டன. தமிழ் பெண்கள் பாலைப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தபண் என்று பெரும்பண்கள் ஐந்து இவற்றின் வகைப்பட்ட பண்கள் பல அவற்றுள் பகல பண்கள், இரவு பண்கள் காலை பண்கள் என அவ்வப்பொழுதிற்கு அமைந்த பண்களும் வருகின்றன.

பழைய மனிதன் உணர்ச்சிப் பெருகால் பாடினார். மனித உள்ளத்திற்கு பாட்டு அமுதமாக பயன்பட்டது.

**“மருது வண்டு சிறந்தார்ப்ப**
**மணிப்பூ ஆடை அது போர்த்து**
**கருங்கிழி தொழுகையில்**
**நடந்தாய் வாழி காவேரி**
**கருங்க கண் விழித்தோழ்கி**
**நடந்த எல்லா நின் கணவன்**
**திருந்த செங்கோல் வளையாமை**
**அறிந்தேன் வாழி ஆவேன்“**[5]

(சிலப்பதிகாரம் கானல்வரி)

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் நால்வகைப் பாக்களும் அவற்றின் இனங்களும் இசையை அடிப்படையாகக் கொண்டவை பரிந்து வரும் இசையில் பரிபாடல் பண், ராகம் ,பண், பாட்டு, பாணர்,பாடகர், பாடினியார் பெண் பாடகர் பாணரும் பாடுனியாரும், இசைத்தமிழின் புலவராக சீரியாழ் என்னும் யாழ் வகைகளை இசைத்து பாடுவோரும் உலர்.

**“பன்னியல் பாடல் ஆறாத ஆவூர்**
**பத்திமை பாடல் ஆறாத ஆவூர்**
**பாஇயல்பாடல் ஆறாத ஆவு**
**தையலார் பாட்டு ஓவா ச்சாய் காடு**

மாதர் மைந்தர் இசை பாடும் பூம்புகார்“[6]

இவற்றில் பெண்களும் ஆண்களும் இசையில் சிறந்திருந்தனர் என்னும் உண்மையை அறியலாம்.

**தேவாரம் குறிக்கும் இசை கருவிகள்**

யாழ், குரல், கின்னரி ,கொக்கரி,தக்கை ,முலவம் ,முந்தை ,மிருதங்கம், மத்தளம், முருகன், முழ தத்தலகம், முரசம், உடுக்கை, தாளம், துடி ,குடி, குட்டி, இதழான இவற்றில் பல சங்க காலத்திலேயே தமிழகத்தில் இருந்தவை வீணை, தமிருகம், மிருதங்கம்,துண்டுமேஎன்பன வடவர் சேர்க்கையால் நுழைந்தவர் என்றுகொள்ளலாம்.பாடகர் இனிய மதுவை கண்டு தமது சிறிய யாழை இசைத்தும் “தெள்விழி“ என்னும் பண்ணை பாடிக்கொண்டும் வைகறையில் திருவடியே செல்வார்கள் பாடலை கோசல நாட்டு மகள் இராஜாவை எழுப்புவதாகும் .

**நடனத்தின் தோற்றம்**

இறைவனது அருட் படைப்பிலேயே பூத்து நிகழ்கின்றது எவரிடமும் பயிற்சி பெறாமலும் கேட்டு தலையில் பண்பை சிறிதளவும் தள்ளாமலும் கரு முகில்களை காணும் மயில்கள் தம் சிறகுகளை விரித்து ஆடுகின்றன .கொடிய அரவங்கள் மகுடி ஓசையை கேட்டதும் தன் புற்றுகளில் இருந்து வெளி வந்து இசையில் ஈடுபட்டு மின் மறந்து படம் எடுத்து ஆடுகின்றன. வேய் குழலில் ஈடுபட்டு கன்று காளிகள் தன்னை மறந்தவனாய் அசைந்தாடுகின்றன.

மனிதன் மகிழ்ச்சி நிலையில் தன் விருப்பப்படி பலவகை ஓசைகளை எழுப்ப அவ்வோசைகள் சில சமயங்களில் அவனை அறியாது அவனுக்கு இன்பத்தை அளிக்க அவன் மீண்டும் மீண்டும் அவ்வோசைகளை எழுப்பி அனுபவிக்க இவ்வாறு எழுப்பப்பட்ட மொழிகளின் செயற்கை காதுக்கு இதமளித்த நிலையில் அவனை பின்பற்றி பிறர துறையில் இறங்கி இருக்கலாம். மனிதன் தன் கூத்துக்கேற்ப ஒலிகளை எழுப்பவும் கைகளைக் கொட்டி இருக்கலாம். அவன் இங்கணம் குதித்தது கூத்தாகவும் முடிகளை எழுப்பி ஓசையிட்டது இசையாகவும் கைகளைக் கொட்டியது தாளமாகவும் மாறி இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்

**இந்தியாவுக்கு வெளியே**

மிகப் பழைய எகிப்திய சுமேரிய பாபிலோனிய நாகரிக கிளைகளில் பலவகை நடனங்களை உணர்ந்தும் ஓவியங்கள் காணப்படுகின்றன.அதனால் அப்பண்டைய நாகரிகங்களில் திளைத்த மக்கள் கூற்றுக்கலையில் பண்பட்டு நிற்கின்றனர் என்பது தெரிகிறது.

**சங்ககாலத்தில் கூத்து கலை**

இன்றுள்ள சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம் என்பதை பெரும்பாலானோர் ஒத்துக்கொள்கின்றன. அதன் குறைந்த காலம் ஏறத்தாழ கிமு 300 என்பது தவறாகாது.இப்ப பழைய நூலில் பழந்தமிழ் மக்களிடம் இருந்து வந்த கூத்து வாயில் ஒரு சிலவகை குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(1) வேலன் ஆடும் காந்தல் வெறிக்கூத்து,

(2) வென்ற வீரன் தம் அடையாளப் பூச்சூடி ஆடும் கருங்கூத்து,

(3) வெற்றியை பாராட்டி பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து,

(4) களத்தை விட்டு ஓடாத இளைய வீரனுக்கு காலில் கல்லை கட்டி இரு பாலரும் நாடும் கழனியில் கூத்து.

முதலியனாகும் இவை பெரும்பாலும் போர் தொடர்பானவை. இவையன்றி ஆராய்ச்சி குரவை வேட்டுபவரின் முதலான வகைகள் இருந்தன.

வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், துன்பம், நகை, நடுவுநிலைமை, வெகுளி என்பது ஒன்பது சுவை நடிப்புகளுக்குரியவை சிலப்பதிகாரம் காதை மூன்று உரை **பக்கம் 83** நடிப்பவர் இவற்றின் நன்கு புலப்படுத்தி நடிக்க வேண்டும். சோம்பலுக்கு உரிய நடிப்பு, பெருமைக்குரிய நடிப்பு, வெட்கத்துக்குரிய நடிப்பு, மழலையில் நனைவதற்கு உரிய நடிப்பு, பணியில் தலையிடுவதற்கு நடிப்பு, வெயிலில் செல்வதற்கு உரிய நடிப்பு, என்று நடிப்பு 24 வகை பகுத்துக் காட்டப்பட்டுள்ளன ஒவ்வொரு வகைக்கும் இலக்கணம் உண்டு. **சிலப்பதிகாரம் பக்கம் 85- 87**அரங்கினர் புகுந்து மாதவி பாடினால் ஆடினால் அப்பொழுது நீர் சொன்ன பழமை ஆசிரியர்கள் இருந்து ரத்தம் தொழில் செய்தனர் அவ்வையையும்

**“குழல்வழி நின்றது யாழோ யாழ்வழித்**
**தண்ணும்மை நின்றது தகவே தண்ணுமைப்**
**பின் வழி நின்றது முழவே முழவொடு**
**கூடி நின் றிசைந்த தாமந் திரிகை**
**யாமன் திரிகையோடு அந்தமின்றி**
**கொட்டி இரண்டுடைதோர் மண்டலமாக**
**கட்டிய மண்டலம் பதினொன்றுப் போக்கி**
**வந்த முறையின் வழி முறையில் வழாமல்“[7]**

மாதவி ஆடினால் அரங்கேற்று காதை வரி 139 - 146 இல் கருத்துடன்

**நாடகக் கலை**

கூத்து என்னும் சொல் முதலில் நடனத்தையும் பின்பு கதை தழுவி வரும் கூத்தாகிய நாடகத்தையும் குறித்து இயற்றமிழ் புலவரும் இசைத்தமிழை பாணரும் பேணி வளர்த்தார். போலவே நடனத்தையும் நாடகத்தையும் கூத்தர் என்பவர் பேணி வளர்த்தனர். நடனமாடும் மகளிர் விரலியர் எனப்பட்டனர். உள்ள குறிப்பு புறத்தில் தோன்றும் படி திறம்பட நடிப்பவள் விரலி ,திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள விரலிமலை என்பது இன்று தவறாக விராலிமலை என வழங்கப்படுகிறது. கூத்தி கூத்தர் ஆகிய இருவர் கதை தழுவி வரும் கூத்துக்களை ஆடினார் அங்கணம் ஆடிய பொழுது ஆண்மகன் பொருநர் என்றும் பெயர் பெற்றான்.நயன்திறம் பொருந்த நாடகம் கண்டும் நன்குணன் தெளிந்த நாடகம் போல வாயிற் கூத்தும் சரி பாடலும் கோவில் நாடக குழுவிலும் வருங்கென கோவில் நாடக குழு அரண்மனையில் நடிப்போர் கூட்டம் என வரும் பதிப்பாசிரியர் அடி குறிப்பு காணலாம் . எட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் நாடகம் நடிக்கப்பட்டதையும் நாடக குழுவினர் இருந்த மையம் வரிகள் தெரிவிக்கின்றன. நாடகம் நயந்தது நான் காண்போர் நலங்கினார் கண்கள் சூன்றும் முத்தி இளம்பகம்- 2989

**மருத்துவக் கலை**

சங்க இலக்கியத்தில் மருத்துவ கலையை பற்றி விவரங்களை அறியத்தக்க சான்றுகள் வைக்கவில்லை ஆயினும் மருத்துவம் தாமோதரன் என்ற புலவர் ஒருவர் காலத்தில் இருந்தார் என்பதை பாடல் கொண்டு அழைக்கிறோம். அவரது மருத்துவம் என்ற பட்டத்தினால் மருந்துகள் உண்மையில் மருத்துவ தலைவர்கள் தாமோதரன் பண்பட்டவர் என்பதையும் நாம் அறிதல் கூறும் பண்ணன் பசிப்பிணி மருத்துவம் என்றும் பெயர் பெற்றான். இத்தொடர் நோய் நீக்கும் மருந்துகள் முன்பு புலப்படுகின்றன

திருக்குறளில் மருத்துவம் ஒருவன் உடலுக்கு நீ ஒத்த படி உணவும் செயல்களும் இருத்தல் வேண்டும். இவை ஒவ்வாத மிகுதி படினும் அல்லது குறையனும் வாதம் பித்தம் என்னும் மூன்று நோயும் அவனுக்கு துன்பம் செய்யும் என்று மருத்துவ நூலு கூறியுள்ளனர் ஒருவர் தான் உண்டது செரித்து விட்டது என்பதை நன்கு அறிந்த பின்பே உண்ண வேண்டும்.

**புனத்திடை பறித்துக் கொண்டு பூத நாயகன் பால் வைத்த**
**மனத்தினும் கடியது வந்த மருந்துகள் பிழிந்து வைத்தார்**

(கண்ணப்ப நாயனார் புராணம் செய்யுள்) 175 176

**மருத்துவ நூலவர் தங்கள் பல்கலைகளில் வகுத்த**
**திருத்த குந்த தொழில் யாவையும் செய்தனர்**

(சம்பந்தர் புராணம் செய்யுள் 713)

**இலக்கியக் கலை**

சொற்களையும் வாக்கியங்களையும் உண்டாக்கி பாடவும் ,பேசவும் அறிந்த மக்கள் எழுத்துமுறை கண்டறிந்த பின்பு தாம் அதுவரையில் வாழையடி வாழையாக அறிந்து வைத்திருந்த சமூக கருத்துக்களையும் சமய கருத்துக்களையும் காலங்கள் செல்ல செல்ல அறிவு வளர வளர மொழி வளம் பெற்றது. மொழியில் வள்ள அறிஞர்கள் மக்கள் படைத்த இலக்கியங்களை பேச்சு மொழியில்அடிப்படையாகக் கொண்டு மொழிக்கு இலக்கணம் வகுத்தனர் .செய்யுள் இலக்கியம் என்பது மக்களுக்கெல்லாம் பொதுவாக பயன்படும் பொருளை உடையதாக இருத்தல் வேண்டும் அத்துடன் இனிய வகையில் சொல்லக்கூடியதாக இருத்தல் வேண்டும் படிப்போறது உள்ளத்தை கொண்டு அவரது வாழ்க்கையும் புலப்படுத்த வல்லனவாதல் வேண்டும் இவையே இலக்கியம் எனப்படும்.

மக்கள் தம் கருத்துக்களை பிறருக்கு எடுத்துக் கூறுவதோடு பிறர் எண்ணங்களை உணர்ச்சிகளையும் அறிந்து கொள்வதில் விருப்பம் காட்டுகின்றன அதே இலக்கியமாக வடித்து நமக்கு முன்னோர்கள் தந்துள்ளனர். உதாரணமாக சிலப்பதிகாரம் எனும் நூலில் கூறப்படும் கருத்துக்கள் நம்மை வாழ்வியலை ஒத்துப் போக செய்கிறது.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்**
**ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்**

சிலப்பதிகாரம் தமிழ் காப்பியங்களில் தலை சிறந்தது என்றும் அனைவரும் போற்றுக்குரியவர் மனிதன் வாழ்விலே சித்தரித்து கூறும் பேரிலக்கியமாகும். மனிதனுடைய நல்லியல்புகளின் தீய இயல்புகளையும் படம் பிடித்து காட்டுவது பல கருத்துக்களை அலைமோதும் இறுதியில் நன்மையே ஏற்படும் வகையில் இக்காப்பியத்தில் சொல்லப்பட்டிருக்கும்

**முடிவுரை**

இவ்வாறாக பின் தோன்றிய நூல்களான சிந்தாமணி புராணம் கம்பராமாயணம் போன்ற சிறந்த இலக்கியங்களும் எனலாம். சைவத் திருமுறைகள் 12ம் ஆழ்வார்கள் பாடல்களும் சமய இலக்கியங்களும் பதினெண் சாஸ்திரங்களும் முதலான தத்துவ இலக்கியங்களும் பரணி கலம்பகம் உலா அந்தாதி முதலிய பிள்ளைத்தமிழ் புறம் முதலிய சிறு நூல்களும் புலவர் தம் இலக்கியங்களில் கலை ஆற்றலை நன்முறையில் வெளிப்படுத்துவதாக இங்கனமே இலக்கிய பண்புகள் அமைந்த இக்கால கதை நூல்கள் கவிதைகள் நாடக நூல்கள் முதலானவையும் இலக்கிய அரங்கில் இடம்பெறும். இவற்றையெல்லாம் இலக்கிய கலை உணர்வோடு படித்து இன்புறுதலில் தமிழரின் தலையாய கடமையாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்- 237
2. தமிழ் கலைக்களஞ்சியம் பக்க எண் 341
3. சிலப்பதிகாரம் 112
4. மேலும்116
5. மணிமேகலை-64
6. சிலப்பதிகாரம் கானல்வரி 85
7. மணிமேகலை180
8. கண்ணப்ப நாயனார் புராணம் 175
9. சம்பந்தர் புராணம்-713
10. சிலப்பதிகாரம்-4

**துணை நூல் பட்டியல்**


1. தமிழக வரலாறு மக்கள் பண்பாடும் மா ராஜமாணிக்கனார் கௌரா பதிப்பகம் பதிப்பாசிரியர் கௌரி மகேஸ்வரி -2011
2. மணிமேகலை புலியூர் கேசிகன் உரை கௌரா பதிப்பகம்-2018
3. சிலப்பதிகாரம் புலியூர் கேசிகன் உரை கௌரா பதிப்பகம்-2017
4. தமிழ் கலைக்களஞ்சியம் புலியூர் கேசிகன் உரை கௌரா பதிப்பகம்-2010


Tamilmanam

## References:


1. Kesikan, P. (2010). *Tamil Kalaikkalanjiyam* [Tamil Encyclopedia]. Kaura Pathippagam.
2. Kesikan, P. (2017). *Silappathikaram* [A commentary on the classic epic Silappathikaram]. Kaura Pathippagam.
3. Kesikan, P. (2018). *Manimekalai* [A commentary on the classic epic Manimekalai]. Kaura Pathippagam.
4. Rajamanickanar, M. (2011). *Thamizhaga Varalaru Makkal Panpaadum* [History of Tamil Nadu: People and Culture] (G. Maheswari, Ed.). Kaura Pathippagam.



நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work



**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

Tamilmanam